உ


சிவமயம்.

கொடுமுடியிலிருந்து தீர்த்தக்காவடி முத்திரித்துவரும்

ஸ்ரீ பழனியாண்டவர்மீது வழிநடை

# நூதன ஆனந்தக்களிப்பு.

22 AUG 1919



685
3.19

இவை

N. மாரிமுத்துசெட்டியாரால்

பழனி

...பிரான்விலாசம் பிரஸில்

...பதிப்பிக்கப்பட்டது.

1919. (அணா—2.

ஒ26:417
N19
149424

Registered Copy-right.

உ

சிவமயம்.

# ஸ்ரீ பழனியாண்டவர்

வழிநடை

# நூதன ஆனந்தக்களிப்பு.

685
3.19

## கணபதி துதி.

ஆனந்தன் புதல்வன் ஆடரிவந் தன்மீது
ஆனந்தப் பதியில் ஆசிக்க—ஆனந்தக்
களிப்பென்ற பனுவல் கருதவே யருளும்
களிப்புக் கரிமுகனே சார்பு.

OFFICE OF THE ... 22 AUG 1919 MADRAS.

## ஆனந்தக்களிப்பு.

தானந் தனா தந்த னானா—தந்த
தானா தானா னாதந்த னானா.

அத்திமுகன் தன்னையேபோற்றி யானும்
அறுமுகவர் தன்மீது யானந்தம்பாட
சத்தியாயெந்தனுக்கு வாக்கு நீயும்
தீர்க்கமுடன்கிருபையது செய்தருளவேணும்
முத்தியதையெந்தனுக்குக்கொடுத்து சாமி
முருகனைத்தியானித்துக் காவடியெடுக்க
சத்திசிவமாயிருக்கும்வேலோன் எங்கள்
சண்முகனார்தனைத் தியானமதுசெய்து. (1)

கார்த்திகனே சிவகிரியில்வாழும் முருகன்
கயிலாசநாதரருள் பெற்றருளுபாலன்
பத்தர்களனைவோருந் துதிக்க பழனி
யசன் றுணையென றுமே பாடிவருஞ்சிலபேர்
வெற்றிவடிவேல்முருகர்மீதில் யானும்
மேன்மைபெருஆனந்தக் களிப்பையான்பாட
கர்த்தாவேகயிலைநாயகனே உந்தன்
கமலபதம்போற்றவே கிருபையதுசெய்வாய். (2)

பங்கயாசனன் மனைவியான கலைசேர்
பைந்தமிழ்க்கலைவாணி பாதமும்நினைந்து
அங்கசன்மின ற மரேசன் வள்ளி
யம்மைதெய்வானைபாதம் அனுதினமும்நினைந்து
இங்கவடிவேல்முருகர்மீதில் நல்ல
சேமாக ஆனந்தக் களிப்பையான்பாட

[illegible]கனாழுவ்வாருகி கன்னி
[illegible]சிவன்ஸ்ரீநர்யதி பாதமலர் துணையே (3)

விருதுசெய்யுஞ்சூரர்களை வென்றோன் நல்ல
வெற்றிவடிவேல் முருகன் சந்திருசிகாரன்
ஆறுபடைவீடுதனிலுறைவோன் அன்ப
[illegible]வினைகளவர்கள் சிறைமீட்டருளுபாலன்
கடம்பமாலைவள்ளிபங்காளன் மருவு
குஞ்சரிமணாளன் மணிக்குச் சேவலுயர்த்தோன்
வேதவினைவாராமல்காக்கும் அருள்
வேலாயுதக்கடவுள் கழலடியேபோற்றி. (4)

சூக்கணம்பொறிகாணமாகி நல்ல
புவியாகியுள்மண்டலத்துவெளியாகி
வேதமந்திர்ச்சொரூபமாகி நாத
விந்தாகியன்பத்தோரட்சரமுமாகி
ஆதியந்தம்பலவுருவுமாகி உயி
ரெங்குமேசோதிவடிவாகியேநின்றோன்
பாதபங்கயமலர்கள்சூடி அடியார்
பரசமயமுருகர்தம் பவனிவரும்பாரீர். (5)

கங்கைநீருமதையமுனைசிந்து வாணி
காவேரிகோதாவரி வளர்துங்கபத்திரி
பொர்கமுடனுஅமுகநதியும் மிக்க
பூலோகநதியும் புண்யநதியுளனும்
எந்தச்சங்குமுண்டானநதியும் பின்னும்
மிகபாசக்கரவடிகளன்புடனேவரவும்
சங்கரிமகிழ்ந்தமருகனும் எங்கள்
சண்முகனைநாடிவரும் வண்மைசனம்பாரீர். (6)

அண்டபகிரண்டமுதண்டம் பின்னும்
அப்பால்வளர்த்துவருஞ் சண்டப்பிரசண்டன்
தண்டமிழ்க்கவிசரிந்தமார்க்கண்டன் உயிரை
வாங்ககாலன்தமறலிதனை உதைத்தவுத்தண்டன்
தென்திசையில் ஆர்ந்துநகண்டன் நல்ல
செல்வமெனுமவுணர்களைக் கொன்றுவருமிண்டன்
கண்டலம்பதிதனிற்போற்றும் எங்கள்
வடிவேலர்தேரில்வரும் வண்மைபார்பெண்ணே. (7)

திருமுக்கிலமல்லிகைசிவந்தி கொன்றை
செண்பகம்பிச்சிபிருவாட்சிசெண்பகமும்

மருவாடிதமணமலர்களெல்லாம் — செம்
  ...வேலரிருபாத மலர்களணியாக
மிருகமதபரிமளசுகந்தம் — நல்ல
  விதமுடன் சாம்பருணித் தூபமதுஞ்ச
குருமுனிவன்மகிழுமுபதேசன் — கௌரி
  குமாரடிபரவிவரும் வரிசைபார்பெண்ணே. (8)

144474

சீரானபங்குனிமாசம் — சகல
  தேசம்விளங்கவே காவடிக்காரர்
நேரானஉத்திரந்தன்னில் — கூடி
  நிரையான காவடிகள் திருசாய்கடாத்தி
தேராதபொருளைநதிநோக்கி — நல்ல
  தொல்லுலகிலெல்லவரும் வல்லமையதாக
காராளைமுகவனைப்போற்றி — இடும்பன்
  கவிபாடிபாட்டங்கள் ஆதிபாடிவரவும். (9)

தீராததாளமதுதீர — மேளங்
  தித்திமிறுகைசுரம் எத்திசைமுழங்க
ஏராளமாகவே சித்திரம் — வரிசை
  எழுதியகாவடிக் காரர்கள்வாரார்
பாரேழும்புகழவரும்பொன்னி — நதியில்
  பணபாகக்கொடுமுடியை நணபாகநோக்கி
நாராயணப்பெருமாளைச் — சப்பு
  நாதனையும்போற்றியே வாராணிடும்பன். (10)

காவேரிதன்னிலேவந்து — அதிக
  செப்புக்கலசம்விளக்கிக் கங்கையிலணிந்து
சேவேறுயீசனருள்பாலன் — பழனி
  தெண்டாயுதசகரனைச் சிற்கையில்நினைந்து
கோவேந்திரன்பொன்னிசூழ்ர்கராசாம் — சங்கள்
  கொடுமுடியில்மகுடேசர் பாதம்நினைந்து
மூவர்களுமாதிமாலுடனே — சருளி
  முப்பத்துமுக்கோடி தேவரைநினைந்து. (11)

வெள்ளியங்கிரிமலையில்வாழும் — உந்தன்
  மேல்தேசந்தனிலுள்ள ரெல்லாருஞ்சூள
கள்ளர்சனைக்கருவறுத்தவேலோன் — துணையென்று
  காவேரிதன்னிலே கலசமதுவிளக்கி
வள்ளிநாயகந்தனைப்போற்றி — நல்ல
  வகையாகக்கலசங்கள் சுத்தமதுசெய்து

தெள்ளிமையாக்குருபரனை வாழ்த்தி காவேரி
தீர்த்தமது கும்பத்தில் நிறையாகச்செய்து (12)
நால்வேதஆகமசாஸ்திரமும் பின்பு
நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளை நினைந்து
வாள்பெருந்திருச்சங்கோட்டதனில் வளரும்
வண்மையுள்ள அந்தணரீசரைப்பணிந்து
சால்வனைத்து மணல்தனைக்கூட்டி பதனில்
சிறப்பாகப்பீடமலங்காரஞ்செய்து
சால்புடன்தீர்த்தங்கள்மோர்ந்து அதிக
சந்தோஷமாகவே யாசனத்தில்வைத்து. (13)

கலசபுண்ணியாசனங்கள்செய்து அருமைக்
கணபதிபாதத்தில் காணிக்கைவைத்து
திலகமுடன் வேதியர்பூசை செய்து
தீர்க்கமுடன் காவடிகள் முத்திரிகள் வைத்து
சலசலெனசேவண்டிகொட்டி வலது
சங்குதவிலோசைக ளெங்குமுழங்க
பலவிதமேளதாளங்கள் டவண்டை
பாரிகைநாகசுரம் பூரிகையூத. (14)

நலமுடனே தாரைசின்னங்கள் பேரி
நவரிநமுமாகவே சாமரைகள்வீச
பிலமுடகடாரிகளுமூத தாளம்
பத்தியுடன்மல்லாரி தித்தியுமூத
வலதுபுரம்வெங்கலடம்மான் அதிர
வாத்தியங்கள்கெர்ச்சிக்க நிமித்தியமுமாகி
குலமுடன் விபூதிகளணிந்து பின்பு
கொடுமுடியைநோக்கியே வாரானிடும்பன். (15)

கொம்புதவில்சம்பட்டமேளம் நாதம்
குலவருணமுரசுபொரு பூரிகையெக்காளம்
தம்புருவீணைசுரமீட்ட மிக்க
சங்கொடுட வண்டைபல துந்துமிகள்கொட்ட
பம்பைமுதல்பதினெண்வாத்தியங்கள் இரவு
பரவண்டமுகடெங்கு மோலிகொண்டுலாவ
சம்பிரமிக்கக்காவடிகள்கொண்டு எங்கள்
சண்முகனைநாடிவரும் வண்மைசனம்பாரீர். (16)

கன்னல்சர்க்கரைவகைகளனேகம் பனீர்
கனிவுடன்தேனுமொரு காவடியனேகம்

மூன்றுசெய்க்காவடியனேகம் தயிர்கள்
முதலானபாலுமொரு காவடியனேகம்
இன்னிலந்தனிலுள்ளதெல்லாம் பின்னும்
இயல்பாகக்காவடிகள் கொண்டுவருஞ்சிலபேர்
சென்னியங்கிரியில்வளர் முருகர் பாகம்
சிந்தையில்நினைந்துமே வாராணிடும்பன் (17)

பொன்னிருழ்க்கொடுமுடியில்வாழும் கொன்றை
பூவணியும்மகுடேசர் பாதம்பணிந்து
கன்னியமதாய்வலம்சுத்தி வருக
நாகசுரமேளமுடன் தாசிகளுமாட
வன்னிமலர்தன்னையுமணிந்து மேற்கு
வடதிசையும்சுத்தியே யிடதுபுறமவந்து
தென்னில்மகுடேசருடமுன்பால் நின்று
தெண்டம்பணிந்துபின் னபிஷேகம்செய்து. (18)

கனிவுள்ள மங்கைபதம்போற்றி நல்ல
காருத்தன்வீரநா ராயணப்பெருமாள்
தன்னையும்கண்டுகும்பிட்டு மெத்த
தயவாகவழிதனில் சென்றுபின்கூட்டி
வர்ணமயில்வேலரைநினைந்து கும்மி
வகையாயடித்துமே தென்திசையில்வந்து
அன்னமெனும்மலையாயிகோவில் சுற்றி
அன்பாகமுன்வந்து சென்றானிடும்பன். (19)

சரணம்பணிந்து அனைவோரும் தந்த
தாவென்று அரகரா முருகனைப்போற்றி
கருணைபுரிதென்திசைநடந்து பழனி
காங்கையன்காவடிகள் பாங்காய்நடத்தி
திரணமதுசோரம்வருகாமல் மலையை
சிந்தையில்நினைந்துதினம் கந்தர்பதம்போற்றி
வரிசைபெருநொய்யல்நதிதன்னை சினமே
வந்துகண்டேனென்று தெண்டம்பணிந்து. (20)

அரகாரமயில்வாகனத்தோன் பழனி
அறுமுகவர்துணையென்று வாராணிடும்பன்
பரராசர்மனமுங்கலங்க — நல்ல
பதினெண்வகைமேள வாத்தியங்கள்செய்ய
இரைராசர்பணியவரும்வேலோன் சத்தி
சுகிர்தசிவமலையினுட கந்தனும்வருக

குருவானபழனிமலைநோக்கி மருகன்
குமாரனைப்போற்றியே வாராளிடும்பன். (21)
வரிசைபெருநொய்யல்நதிவிட்டு தெற்கு
வழிகூடித்தெளிவாக வருமதுவேளை
விரசுடனேகோபாலமலைக்கி நேராய்
மேல்புறம்தனிலண்ட தேவரப்போது
சரசமுடன்நாட்டியங்களாட பழனி
சண்முகனும்காவடியில் சம்பிரமாய்வருக
பரவணியாய்பெருபெரும்லோலன் எங்கள்
பழனியான் துணையென்று பாடிவரும்சிலபேர். (22)
திரமானகாவடிகள்வருக பிற
தட்சணமாயாண்டியும் தட்சணமாய்வருக
சிரசாறுபன்னிரண்டுகையோன் வள்ளி
தெய்வானையிவருட மணாளனும்வருக
இரவுபகலாய்நடந்தென்பின் கொழுந்து
இயல்பானமணல்நாடு தென்னைலைப்பதியில்
அரகராமயில்வாகனத்தோன் பழனி
ஆறுமுகவர் துணையென்று வாராளிடும்பன். (23)
நிரையானகுறடுமதுவாசல் வந்து
நேரமேகாவடிகள் சேரவேயொட்டி
குறமாதுபணிகின்றலோலன் இந்த
கொங்குதனில்ஆறுமுக மெங்குமாய்நின்றோன்
தருமமுடன்வைகாவூர்நாடு தாளுடு
மேல்பழனித்தருமதுரை நீயேவளர்ந்தோன்
ஒருமானைச்சிரசிலணிந்தோன் நல்ல
உத்தண்டவேலாயுதக் கர்த்தாவைப்போற்றி. (24)
நிரமானவிபூதிகள் தரித்து வெங்கும்
நிச்சயமாய்க்காவி வஸ்திரமுங்கட்டி
கரிமுகவிநாயகனைப்பூசை செய்து
காவடிசுற்றியே தூபமதுகொடுத்து
தாரகமயிலேடமுதுகிலேறும் பழனி
துரைராசர்பொற்பாதம் நட்புடனினைந்து
அருளுலவுங்கிருபைதருவேலோன் எங்கள்
ஆண்டியைப்பாடியே வாராளிடும்பன். (25)
சந்திரனுதிக்குமேமுன்னே சித்தன்
அம்பலாதக்காவடிகள் தோளமீதில்வைத்து

கந்தரைநினைந்துமுன்கூடி நல்ல
கவிபாடியாட்டங்கள் துதிபாடிவருக
சொந்தமுடன்ஆனபொருநதியில் வந்து
தொந்தோமென்றடியே தொழுதுகும்பிட்டு
மந்திரமிகுந்தபுகழ்மணலூர் இருக்கும்
மகத்தானயம்மனையும் பரவுதல்செய்து. (26)

செந்தில்வடிவேலவர்க்குமுன்னேன் நல்ல
செல்வவிநாயகனைச் சிந்தையில்நினைந்து
பந்துசனஞ்சூழவேமுருகன் முன்பு
பதினெட்டுவகைமேள வாத்தியங்கள்செய்ய
சிந்தையுடன்வலதுபுறம்வந்து உம்மை
தெண்டனிட்டேனென்று தண்டமிழ்பாடி
விந்தையுடன்காவடிகளொட்டி நல்ல
வேலவரைப்பாடியே வாரானிடும்பன். (27)

மண்ணுபுகழ்தென்கரையில்மணலூர் நல்ல
வளமானதலையநா டதிசயங்கேளும்
பண்ணைவரிருக்குமலைநாடு தெய்வ
பாண்டியன்குடியிருக்கும் பனிமதுரமலையும்
நண்ணுமுகில்வளரங்கமலையும் எங்கள்
நாதன்குடிகொண்டுதினம் வாழுமலையும்
என்னுமுதல்குடியிருக்கும்கொண்ட விரங்கி
எழில்மலைகள்மல்லிகார்ச் சுனைவளரும்நாடு. (28)

விண்ணுவெனும்ஜலருடபூசி சித்தன்
விளையாடும்ரெங்கமலை முன்னாளிதுண்டு
கன்னலெனும்தேவர்மன்றுடிய மலையில்
கருநாய்க்குட்டியது காய்க்குமரமுண்டு
உன்னுதநஞ்சுநீர்சுனையும் வீமன்
ஊனியதெண்டாயுதப் பாறையதிசயங்கேள்
தொண்ணூற்றியாருடனேவளமை நதியும்
தொடர்புடன்சொல்லியே வாரானிடும்பன். (29)

கையாதவேம்புகருநெச்சி தெய்வ
காட்சியுடன்பொன்புள்ளி மரகதக்குலையும்
பொய்யாமைவசனமுள்ளநாடு நல்ல
புகலுதற்கரிதான பாடியதிசயமும்
மெய்யானகளிப்பையதுபாடி பின்னும்
மெய்ப்புடன்காவடிக ளின்பமுடன்வருக

ஐயானகோவிந்தத்தீர்த்தம் நல்ல
அழகான செண்பகச் சிற்றருவுமுண்டு. (30)
மெய்யாகவேணுளும்பொருந்தி நின்ற
நீடியவைகாசிக் குடாநதியுமுண்டு
வதயலர்கள்முழுகிவிளையாடும் எங்கள்
தாயானபொருனைநதி அண்டமாநதியும்
வையாளியான மயிலாடும் நல்ல
வரிசைபெரும்வீராண வள்ணத்திலுண்டு
ஓய்யாரமாய்க்கும்மிபாடி தலைசை
ஊர்வளம்சொல்லியே வாரானிடும்பன். (31)

சீர்கொண்டதலையநாடதனில் [illegible]
செப்பமாய்வளமைகளும் மெய்ப்புடன்கேளும்
நீர்கொண்டமுக்கவர்ப்பணையில் கூடும்
நிலையாகயேமுழுகவுர்ப்பணைகளுண்டு
பேர்கொண்டஇன்னகர்தன்னில் வாசும்
பிரசண்டவிநாயகன் பனிரெண்டுமுண்டு
வார்கொண்டவாசிறச்சப்பாடி யதனில்
வேணுகோபாலனருள் பரவுதலுண்டு. (32)

தேர்கொண்டஆதிநாரணனும் மூர்த்தி
செயங்கொண்டசோமுக ராட்சதனுமுண்டு
பேர்கொண்டவஞ்சிநாரணியும் ஆதி
புகழ்கொண்டகண்ணனூர் நாரியுமுண்டு
ஏர்கொண்டவேளாளர்தன்னில் கன்னி
இயலானகன்னர்குல நாரியுமுண்டு
சீர்கொண்டகாவடிக்காரர் பழனி
சிமையைத்தேடியே வாரானிடும்பன். (33)

நம்பியேவளர்ந்தவகைநாட்டில் கனிகள்
நயமுடன்காய்மரம் சாயமரமுண்டு
அம்புசேர்பஞ்சாரைக்காயும் இந்திரன்
அழகாய்க் குடியிருக்கும் வெள்ளாணைக்காடு
வெம்பிசெரிஇந்திரகுமாரன் நித்தம்
வெளிக்கிடப்பொன்மாரி பேயும்வளமுண்டு
நம்பிமுகனுருடைய தலமும் காவும்
அடித்தலும்பெருகுநதி வாசமுமுண்டு. (34)

அருமைபெருந்தென் தலையநாட்டில் தலைக்கும்
அதிசயம்சொல்லியபின் மலைவளங்கேளும்.

தருமநெறிமுறை தவிராத — நச்சன்
தனைத்தவளர்கொண்டாங்கி மலைமுன்னாடு
திருவாலைச்சுற்றிவருமலர்கள் — இரங்கி
தெளிவாகக்கன்னப் புத்தினிலெழும்ப
குருவானரங்கமலைநாச்சி — உலகம்
குவளைமலர்நாற்றுவரும் வளமைசொல்லிமிடும்பன். (35)

குகனாஞ்சிவமலையுஞ்சென்னிமலையும் — தெய்வ
குருவடியுஞ்சதுரகிரி வெண்ணமாமலையும்
நகமுலவுதிருவணைமலையும் — எங்கள்
நாகதோகைமலை ரத்தினகிரிமலையும்
சிகமுலவுபொன்னூதிமலையும் — வளரும்
சிட்டியுள்ளசோலைமலை தென்பொதிகைமலையும்
வகைவகையாய்க்குன்றுகள்தோறும் — வேலர்
வசித்ததைச்சொல்லியபின் னல்வழியுஞ்சென்று. (36)

பருவமுடகெழுங்குமுனியூற்றில் — வந்து
பண்பாகமலர்கள்விளை யாடுவதுமுண்டு
பெருமையுள்ள தலைசைவளநாட்டில் — வளரும்
பிறகபலம்சொல்லியபின் அரகராவென்று
பிரியமுடன்காவடியெடுத்து — நல்ல
பொற்புடன்பாடிவரும் சிறப்பையதுகேளும்
திருமலர்கள்மின்றகுமரேசன் — பழனி
மிலைதேடிமலைநாடி வாராணிடும்பன். (37)

பண்டுசெலமேசெய்யுங்கூற்றம் — பூண்டி
பண்பாகக்கண்டபின் காவடியிரக்கி
தண்டிமடவார்க ளொருபுரமாய்க் — கூடி
தகவுள்ளகாவடிமுன் கும்மிகளடித்து
இண்டியம்பலதிசையுமதிர — மயில்
இக்கரனையெல்லவரும் தோத்திரமுஞ்செய்து
கொண்டலெனுமால்மருகனை — எங்கள்
குழந்தைவேல்தனைநோக்கித் தெண்டம்பணிந்து. (38)

சித்திரக்காவடிதனக்கு — தீப
தூபங்கொடுத்துமே தாகமதுதீர்ந்து
எத்திசையெலாம்புகழும்வேலன் — அவர்
இயலானபழனிநக ரெல்லைதனில்வந்து
சத்தியவாசகந்தப்பாத — இடும்பன்
தாகமதுதீர்க்கின்ற வகையோதிப்பட்டி

சித்தியுடனப்பைபம்பட்டி கண்டு
திசைகாடிக்காவடிகளிசைபாடிவருக. (39)

பத்தியுடன் பாலப்பனாரைக் கண்டு
பொன்னுனநல்மங்கை யோடைநதிவந்து

தத்தியமாயெல்லவருங்கூடி காவடி
தன்னையிரக்கியே பாவாடம்போற்றி

முத்திதரும்வேலவனைநினைந்து முருகன்
மூனைபாடவசசொல்லி யினைப்பாரிவின்று

அத்திமுகனுனவர்க்குப்பூசை செய்து
அருளாடிக்காவடியில் வாராணிடும்பன். (40)

அஷ்டதிசைக்காவடிகள்கூடி சத்தி
அதிருபநல்மங்கை யோடைநதிவிட்டு

சட்டமுடன்பதினெண்வகைமேளம் நல்ல
தாளமுடனுகசுரம் ஓசையுமுழங்க

திட்டமுடன்ஆண்டியைநினைந்து திசை
தெற்குமுகபநோக்கியே பக்கமதுவாரார்

பட்டமெனமயில்கள்விளையாடும் நல்ல
பாக்கானனல்லப்பி பாளையத்தில்வந்து. (41)

பட்டில்விளையாடும்பம்பரம்போல் சுற்றி
வாதருகும்பிபாடியே சொல்லிவிளையாடி

செட்டியெனும்பழனிமலைகாட்டில் வாழும்
செயமேட்டுப்பட்டிதனில் சிறப்புடனேவந்து

கெட்டியெனுமரகராவென்று முத்தி
கிருபைதரும்வாசறைக் கொருநொடியில்வந்து

அஷ்டமயில்மீதில்வரும்லோலன் பழனி
துரைச்சாமியைத்தேடி வாராணிடும்பன் (42)

தஞ்சமென்றோர்தனைக்கார்க்கும் பழனி
தலம்வாழும்வாகறைப் புலம்தனில்வந்து

கஞ்சமதுமாதுவளர்வேலன் சித்திரக்
காவடியிரக்கிபே பாவடம்போற்றி

அஞ்சலெனநடனங்கள்செய்து நல்ல
அவல்பலகாரமது செய்தினைப்பாரி

கொஞ்சுகிளிதான்மொழிகள்பேசும் சங்கள்
குலபாணபுலவனூர் காவடியெடுத்து. (43)

மஞ்சுலவுமலைகள்படிந்திருக்கும் நல்ல
வைகாபுரித்தலமும் விசையதிகேளும்

# ஆனந்தக்களிப்பு.

பஞ்சவர்ணம்பெற்றசிகாரம்
  பாடுவதுமரிச்சிலம் போசையதுகண்டு
செஞ்சொல்மொழியாய்க்கும்மிபாடி
  தெய்வானைவள்ளிமயில் வாகனனைக்கண்டு
குஞ்சரமுகனுனபெங்கள்
  சூரனைப்போற்றியே வாரானிடும்பன். ([illegible])

அச்சமதுயில்லாமல்வந்து முருகன்
  அருள்பெருதுகிருபைதனில் கண்டுமுன்பாக
கச்சையுமூடுத்தியேயிடும்பன் காலில்
  கட்டியசதங்கைகளும் அட்டதிசையதிர
பச்சைமயில்வாகனன் வாழும் நல்ல
  பரிவானபுளியம்பட்டிச் சோலைதனில்வந்து
உச்சிதக்கண்ணழகுங்கண்டு கிரியில்
  உயர்பழனிநகர்வாழும் உண்மையதுகண்டு. (45)

செச்சைபுகழ்வளர்பழனிநாட்டில் உதித்த
  தெப்பக்குளங்களொடு சரவணக்கிணரும்
மச்சமுடன் வாளைமீன்கெளிரும் உயர்ந்த
  வைகாபுரிக்குளமும் மெய்பானநதியும்
சச்சரவுகள்செய்து வருஞ்சூரர் வென்று
  சுகமபெறுமுச்சரவணப் பொய்கைதனில்வந்து
வச்சிரமணிபோல துலங்கும் வடிவு
  வரன் மகன்மலைதேடி வாரானிடும்பன். (46)

ஆலயம்பதிசுற்றிவாழும் நல்ல
  ஆவினன்குடிவந்து சேவடிவணங்கி
மாலையணிமூர்த்தியைநினைந்து அணைவர்
  மான்மியப்பெருவீதி நோக்கியேவந்து
நீலமலையர்ணகிரிநடந்து தெற்கு
  நிமிஷத்தில் வந்துமலை படிவாரங்கூடி
தாலவனஞ்சூழ்கிரியைச்சுற்றி வார
  தெகுளத்தைநீகேளும தென்பழனிமகிமை. (47)

பால்சொரிக்கேதினம்வாழும் நல்ல
  பாதிரிவினாயகனைத் தோத்திரமுஞ்செய்து
வால்வுள்ளவடதிசைநோக்கி வருக
  வடிவான மந்திகள் விந்தைகவிபாட
ஏலமென்றெவர்களும்பாட தம்பி
  எண்டிசைதுலங்கவே வண்டுகளும்பாட

தானதாசிகளும் சாது
வேகிரிசுற்றி வாரானிடும்பன். (48)

பன் றவாக்கமதுதின்று நல்ல
சாவுமவுனியுந் தினமிருக்கின்ற
ருசியப்பனையுங்கண்டு தாதிக்க
சகதண்டமதிரவே பேரணிமுழங்க
இனிதுவடதிசைசுற்றிவந்து வீதி
ஏராளமாய்ப்பெருங் கீழ்த்திசையில்வந்து
புனுகுடன்சவ்வாதுகள்வீச அனுமான்
பொற்பாதந்தானுட மோர்க்கிரிகளாட (49)

கனிமையாயெல்லவரும்நடக்க மயிலில்
சயமாகமுருகனுங் கூடவேவருக
முனிபூதவேதாளமாட குயிலும்
மோதவேயன்னங்கள் தாவிவிளையாட
தனிமையுடன் தாராவுமாட அபின
தாய்காளியாடவே நீளவேலுமாட
குனிதமுடன்காவடியுமாடி எங்கள்
குமாரனுடசுற்றியே வாரானிடும்பன், (50)

சந்திரசூரியருமாட நித்தன்
தாண்டவமுமாடியே சத்தியுமையாட
கொரநலவுபாதிசரைகார்க்கும் நல்ல
குளக்கரையில்வீற்றிருக்கும் குஞ்சரமுமாட
விந்தைசெரிமீன்பாறைக்கன்னி தானும்
வெகுதார்க்கைராட்சசிகள் விந்தைதகவிபாட
சந்தியெனும்பெரியநாயகியும் நடன
நாதனும்பலவிசையக் கோபாலராட. (51)

செந்திவடிவேலவருமாட சத்தி
தெய்வானைவள்ளியுமை மெய்சாகம்பாட
அந்திபகல்அறுபதுநாழிகையும் உம்மை
அடிவணங்குங்காவடிக் காரருமாட
பந்திபரிநடனமிடுவீதி கிழக்கு
பதிதனிலாடியே பத்தியுடன்வந்து
சாந்தமுடன்தெற்குமுகநோக்கி நல்ல
சொம்முருகன்கிரிசுற்றி வாரானிடும்பன். (52)

வேதியர்கள்சாஸ்திரிகள்பாட தர்மம்
விளங்கிவருந்தென் திசையில் வீதிவரும்போது

ஆதிமாலுடன்சாமிபாட நல்ல
ஆனாசவாணிபூ மாதேவியும்மாட
நீதிபெரும்பிர்மாவுமாட சத்தி
கிட்சையமாயுத்திர தேவரும்பாட
சோதியென்றாத்தினமுந்துலங்க நல்ல
தெளிவானபச்சையது துலங்கியிருபுறமும். (53)

சாதியெனுங்குங்குமகதம்பம் நல்ல
சாந்தமுள்ளரோஜாப்பு வாசனையும்வீச
வீதிதனிலன்னமும்வந்து மயிலும்
வேலனை நினைந்துமே தாலாட்டிவருக
நாதிய தமிழ்ப்புலவர்பாட வண்மை
உண்டென்றுதாராவும் பண்மொழிகூற
கோதியவணங்கி நீவேச ஆதி
குருவாணகிரிசுற்றி வாரானிடும்பன். (54)

மாமரம்பிலாமரமுமோத அதில்
மகத்தானகமுகுடனே தென்னைமரமோத
பூமரமனோகமணம்வீச வெற்றி
புகழும்வெண்சாமரம் இருபுறம்வீச
ஏமமாய்ரதத்திலேறிமுருகன் வருக
ஏகமாயெல்லவரும் பரவுதல்செய்ய
சேமதரும்பரிசுகளும்செய்வார் பூமி
சேரவேதாங்கும் பணமுடிகளாட. (55)

பாவகமாயட்டதிக்குளோர் நல்ல
பாலகருமுன்னின்று வேதமுறையோத
மேவுகிரிதென் திசையில்வருக [illegible]
விதமானதென்றலது நிழலாகவீச
காவலுடன்வேதியர்கள்சூழ அருமைக்
கடம்பமாப்பூவு வாசனைபுலாவ
தாவுமயிலோனைவேவாரான் எங்கள்
சண்முகன்கிரிசுற்றி வாரானிடும்பன். (56)

தேடிவரும்காவடியும்வருக முருகன்
திருவிளையாட்டங்கள் பெருமையதுகேளும்.
பாடிவரும்வீதிதனிலெங்கும் தண்ணீர்
பந்தலதுஅன்னச் சத்திரங்களுண்டு
வேடிக்கையாய்வரும்போது நல்ல
விதமான பந்தோலைத் தோரணங்களுண்டு

கூடியதிருக்குமயிலாடும் பாறை
கருப்பணசாமிபிர சித்தமுமுண்டு. (57)

கூடியதோர்தவசிசன்னசி ஆண்டி
கொண்டகிரிவாழக்கைசம் பத்துமேயுண்டு
சூடிவரும்மலர்வாசம்வீச வண்டு
தோராதசங்கீதம் பாடுவதுமுண்டு
நீடிவரும்மங்கைப்பூவில் மேலே
கிளைறுவளர்த்ததசராவும் னேர்வாழ்வதுண்டு
ஆடிவருங்காவடிக்காரர் சூழ
ஆறுமுகன்கிரிசுற்றி வாராணிடும்பன். (58)

அத்திமுகன்றுணைவனெனும்வேலன் அவர்
அருளானகழல்தனைப் போற்றியேநடக்க
நத்தியங்கள்செய்துவரும்[illegible]ங்கள் ஆடித்
தொங்தோமென்றேநடன முத்திவிளையாட
பத்தியுடனனைவோருங்கூடி மேற்கு
பரிவானவீதிதனில் தெளிவாகவந்து
கத்திகைதரித்துமேவேலர் வந்து
கார்வருணக்கிரிபோல இலகவிதைபாட. (59)

சித்திரக்காவடிகளாட மணிகள்
சிலராகமாகவே சங்கீதம்பாட
சத்திசிவனாருளும்பாலன் மலையில்
சுந்தரியும்புன்னையுடன் கொன்னைமரமோத
நித்தியமதுசாம்பருணிவாசம் வீச
நீதமட்டிப்பாலுடன் புகைவாசமுலாவ
எத்திசைவேலர்மனமகிழ எங்கள்
இறையவன்கிரிசுற்றி வாராணிடும்பன். (60)

ஆடுமயிலாடவும்வெற்றி நல்ல
அருளானயிடும்பனுங் கூடிவிளையாடி
பாடுவர்களாடவும்பாட கொடை
பட்டணத்துராஜர்கள் கட்டியங்கள்கூற
தேடுகயமாமுகவனின்று இனிமை
தெண்டாயுதக்கரனைச் சிந்தையில்நினைந்து
நீருமனைநெய்விளக்கேற்றி மஞ்சள்
நீருவிளையாடவே தேருகிழலாட. (61)

வாடுமனத்தோர்கலியகற்றும் பூர்வ
வைகாபுரிக்கினிய வளமைகளுங்கேளீர்

கூடுந்திசேர்வேலவனருளுழங் என்னி
கூர்மம்பம்மாபட்டிக் கோவில்தமுண்டு
நாடுகளிலுள்ளவர்களெல்லாம் போற்ற
நாழியில்கருப்பண னருள்தாரதண்டு
ஏடுமணிவடமேர்தஞ்சித்தர் வாழும்
எம்பிரான்கிரிசுற்றி வாரானிடும்பன். (62)

செங்காவிவஸ்திரமுங்கட்டி நல்ல
சிலன்மகன்முகமுற்ற மணிகளுமணிந்து
கொங்குசிவமாமலையுமுதலாய் காசி
குடகமொடுளண்ணேழு தேசமும்வருக
தங்கமயில்வாகனக் தறடும் வந்து
சுகமாகநின் றுபின் தெண்டம்பணிந்து
வங்காரமானமயில்வீரன் கிரியை
வலம்வந்துமானிடவர் பணிகின்றவேலன். (63)

சிங்காரமாகவேமுருகன் வள்ளி
தெய்வானைதன்னுடன் ஒய்யாரமாக
சங்காரமிடுகேடகதிரன் காவடி
தன்னுடன்கூடவே இன்பமுடன்வாரார்
அங்கமாயெல்லவரும்சேர்ந்து முருகன்
துணையென்றுகரங்களை கூப்பியேநின்று
தங்காமல்காவடிகள்கூடிப் பழனி
தலம்வாழும்மலைநாடி வாரானிடும்பன். (64)

காராவின்மீதில்வரும்நாதன் ஆநந்தக்
கண்ணன்மகன்ஊர்வளம் இன்னமும்பாரீர்
பாமேழுமெய்யானமூர்த்தி நல்ல
பண்டாரந்தனில்வாழும் வடிவேலுமன்னியே
ஆறுமுநாறாருபடைத்தோன் நல்ல
ஆகாசமூர்த்தியார் பழனியாண்டோனே
நாராவும்வன்னை மயதுபெருகி நல்ல
நாடிவரும்வையாபுரிக் குளங்களுள்ளோனே. (65)

தாராவும்மயிலினங்கள்வாழும் எங்கள்
சரவணப்பொய்கையி லுதித்தவனும்நீயே
சிரானசண்முகனதியில் மேலா
தினம்வந்துவிளையாடுஞ் சேவற்கொடியோனே
நேரானகாவேரிபோலே செல்வம்
நிரைவயல்கள்விளைகின்ற வளர்பழனிவேலோன்
தோராதமாலோனைவாழ்த்தி ஜனகம
சொல்லியேமலையேறி வாரானிடும்பன். (66)

வாராணைநேர்பாலாறுநதியும் பழனி
    வையாபுரித்தலமும் மெய்யானமூர்த்தி
ஆராவும்பொருளெனும்யோகன் கொத்தி
    ஐங்கரர்க்கிளையவன் ஆறுமுகவேலன்
தாருணமரிந்ததிருவாசகன் அதிக
    சண்டப்பிரசண்டனெனும் நின்றவடிவேலன்
காரணகிருபையுமுள்ளோன வாழ
    கடல்சுவறவேலதை விட்டசிங்காரன். (67)

பூரணதிருமுகம்போலும் நல்ல
    புற்றரவனுத்தமணி சத்திசிவபாலன்
நாரணமருகனெனுங்கூலன் இர்த
    நகர்த்தனையாளுமகந்தக் கானமயில்வீரன்
கூர்மைசெரிவள்ளிமணவாளன் சத்தி
    குழந்தைவடிவேலனெனும் குருபரமெய்ஞ்ஞானன்
தீரசூரருடனமம் பேரு
    சொல்லியேமலையேறி வாரானிடும்பன். (68)

கொங்கேழ்சிவாலயமுங்கூட்டி நல்ல
    குடகுமலையாளமுதல் வடகாசிமுதலாய்
அங்கமொடிலங்கையதசுற்றி செஞ்சி
    அழகானசிங்களமடில்லி சஞ்சாவூர்
மங்கையுடன்விராடபுரங்கொங்கு நல்ல
    மதுரைமுதல்பாஞ்சாலதேசமதுமுதலாய்
இங்கிதவெற்றிசேர்மறவன் சீர்மை
    இணைசேரும்பெரியகுளம் சித்தாருமுதலாய். (69)

பங்குபிரியாகவேவாழும் பெரிய
    பாச்சலூர்மேற்கு யானைமலைமுதலாய்
சங்குபுரிவாளரசர்பழனி நல்ல
    தலம்நாடியென்னும் தேசமும்வருக
எங்கெங்குமானிடவர்கூடி நல்ல
    ஏழைபங்காளருட காவடியெடுத்து
சிங்காரமானகிரிசுற்றி வந்து
    சிவசேயன்மலைநோக்கி வாரானிடும்பன். (70)

ஆம்புசேர்வைகாவூர்நாடு நல்ல
    ஆவினன்குடியான அதிகமுள்ளநாடு
சம்புசிவனூர்பாலநாடு நல்ல
    தயவானமால்மருகர் முருகேசநாடு
நம்பினவரைக்காக்கும்நாடு அதிக
    நயமானகுருவாசமும் தமிழுள்ளநாடு

வெம்புசேர்கேல்முருகர்நாடு சீர்த்
விளங்கவேமனுநீதி தவரார்நாடு. (71

வம்புலிசித்தர்வளநாடும் பெரிய
மாமுனிவர்கும்பமுனி வாழுமலைநாடு
கொம்புலியர்தேனுமலைநாடு வாழை
குலைசாயநவநீத கனியுள்ளநாடு
செயமீரமாகவீரரிருக்கும் நல்ல
கிரிவேலச்சின்னேறுபன் கிருபையுள்ளநாடு
தம்பிரான் முருகேசனுடைய பழனி
தலநாடுவளஞ்சொல்லி வாரானிடும்பன். (72)

கர்த்தனருள்சங்கரன்பழனி சாமி
கருதிமலைமீதில்வளர் கதிமகிமைகேளும்
பருகதசன்னுசிமண்டபமும் தபசு
பாவாடம்போடவே பண்டாரமடமும்
அத்திருமுகன் மண்டபங்கள்தோறும் முருகன்
ஆடிவரும்காவடிகள் தேடிமலையேறி
சத்தமுடன் காவடிகள்கொண்டு நல்ல
திருசடனேவகையான தாளமதிர. (73)

சத்திசிவபாலன்வடிவேலன் மலையில்
சம்பிரமுடன்பாடிவரும் பின்பமதுகேளும்
நித்தியமதுகைவிளிலை பாடும் மலைமேல்
நீலமயில்வாகனக் குறமகனில்வந்து
சத்திரையில்மாளிடவர்கூடி நல்ல
ஏழைபங்காளனையும் தேடிவரும்போது
வெற்றிவடிவேலர்மலையேறி பாடல்
விதஞ்சொல்லித்தேடியே வாரானிடும்பன். (74)

அண்டர்கள்பணியுமெய்ஞ்ஞானன் கிரியில
அதிசயஞ்சொல்லியபின் னருமையதுகேளும்
கொண்டல்கிசர்மாலைபனுமுற்ற நல்ல
குழந்தைவேல்தன்னையும் போற்றியேவந்து
கண்டுமகிழ்கெட்சணம்வருக முருகன்
காவடிகள்கூடிமிகச் சேவடிவணங்கி
மண்டலந்தானறியவந்து இடும்பன்
மலரடிகள்பணிந்துதினம் மலையேறிவந்து. (75)

பண்டுமொழியாய்க்கும்மிபாடி நல்ல
பழனிமலைதனிலுள்ள வளமையதுகேளும்
விண் மதுமாலதுகடாட்சம் பெற்ற
வேலாயுதக்குமார ரிருக்குமிடந்தேடி

சூல்நுதலில்கின்று நடமாடும் — நல்ல
சூரனைசவடிவேலாயுதன் குளுந்தமடங்கண்டு
ஐவடிவைசயெல்லாப்புகழின்று — முருகன்
இவையடிகள்தொழுகவே வாராளிடும்பன். (76)

பாண்டரங்கன் மகனைநோக்கி — துதித்து
பாதமலர்காணவினி யாதரவுவேண்டி.
மீண்டுவருங்காவடிகள்கூடி — நல்ல
சிந்துடன் கும்மியது சந்தமுடன்பாடி.
தாண்டவப்புரிநடனமாடி — நல்ல
சரவணபவனென்று அருகுடனேவருக
பாண்டகமதைக்கொண்டுகொத்தன் — இருக்க
பாத்திரங்காவடிக ளவனையுங்கண்டு. (77)

பாண்டிகமாயாடிவிளையாடி — வருக
பாதங்கள்தொத்துவது கோடானகோடி.
ஆண்டவனார்கடந்தவிளையாடும் — தங்க
அன்பானபடியென்று அனைவோருந்தொழுது
தீண்டாதபேர்களனுகாமல் — வருக
சேவற்கொடியோனும் தெரிசனைகாண
தாண்டவர்நடமாடுமலையில் — இருக்கும்
தாருகாரிபதந்தேடி வாராளிடும்பன். (78)

ஆறுமுகவேலர்மலைமீதில் — சித்தர்
அழகெல்லாம்கண்டுதொழ ஆயிரங்கண்வேணும்
சிறுமயிலோன்புகழைசொல்லி — நல்ல
செந்தமிழ்ப்பாடியே விந்ததநடமாட
கூறுதமிழானந்தக்களிப்பைப் — பாட
கோபுரமெல்லாமாட வானவருமாட
பேதமெல்லாம்வந்துபோற்றும் — பழனி
பெரியநாயகிபாலன் மயிலில்வரும்போது. (79)

நாதகனைப்போற்றியேவருக — பெரிய,
தாபதரிவரெல்லாம் கூடவேவருக
வாருலவுசிங்காடல்சூழ — முத்து
வச்சிரப்பூச்சக்கிரக் குடைகளுமிலங்க
பூருவமாய்சக்கிரடானும் — நல்ல
புகழ்பிறமுற்றதொரு பச்சைடால்சூழ
பாருலகில்வளர்காவிட்டானும் — சூழ
பழனியான்வலஞ்சுற்றி வாராளிடும்பன். (80)

# ஆனந்தக்களிப்பு.

பக்கமேகாவடியிறக்கி — இந்த
பாருலகெலாமறியச் சேவடிவணங்கி
உக்கிரமுடன்முத்திரியவிழ்த்து — பார்த்து
உபயகாவேரிநதிச் சலமுமிரையாக
பக்குவமாய்க்கொப்பரையிலிட்டு — செய்ய
பிராமணர்தன்கையில் விருதுமிகக்கொடுத்து
மிக்கபழனிபுரியின்கோவில் — புகுந்து
வேலாயுதன்சிரசில் பாலாருபோலும். (81)

திக்கெல்லாமெரியவிட்டதீபம் — அந்தத்
தூபமணிமாரியபிஷேகமுதலாக
சக்கரைபழந்தேனும்நெய்யும் — ஏலம்
சீனிபேரீச்சம்பழம் கொப்பரையிலிட்டு
ஒக்கவேமுந்திரிப்பழமும் — தேங்காய்
உடைத்துத்திருகியது உண்டையுடன்சேர்த்து
அக்காளையேறிவரும்பாலன் — பழனி
ஆண்டவன்பதங்காண வாராளிடும்பன். (82)

எம்பிரான்முன்னேகவந்து — நன்றாய்
எழுதியமுகமாறு கொப்பரையிலிட்டு
நம்பியான்கையிலது கொடுத்து — பழனி
சாமிக்கிப்பண செய்யும் வாசிமறையோர்கள்
கும்பாகவந்துமுன்னிருந்து — அமிர்தம்
கொள்ளவேகுழந்தைவடி வேலர்மனங்குளிர
தும்பைபஞ்சாட்சரமுந்தரித்து — இருக்க
ஐரைச்சாமிபதமலர்க ளெல்லவருந்துதிக்க. (83)

இன்பமாய்பதினாரபிஷேகம் — செய்து
ஏராளமாகவே சவ்வாதும்வீச
முன்பாகமுகமாறுபுயமும் — மார்பும்
முடிமுதலயிர்தத்தைப் பாதம்வரையாக
தென்பாக அள்ளிமிகவைத்து — எங்கள்
தேவர்சேனாபதி மனங்குளிமையாக
அன்பானவேதசாஸ்திரங்கள் — சொல்லி
அபிஷேகமாடியே நின்றானிடும்பன். (84)

சுந்திரனுசேர்மதுரைநகர்மேவும் — நளின
சொக்கர்மீனாக்ஷியும் பக்கமேவருக
அந்திரக்கன்னியர்சூழ — லோகம்
அதிவுள்ளமாதிடவர் சாவடியும்வருக

விக்கைசங்கீதங்கள்பாட நாடி
விசமாகச்ச துருட குட்டியங்களாட
மந்திரபுஷ்பமணிசாற்றி வசனம்
மாமியுடனெடியமால்க் கூடியேவருக. (85)

மூத்தகரிகணபதியும்வருக வள்ளி
மூதலானதெய்வானை நாயகரும்வருக
முர்த்தன்மாலெல்லவரும்வருக நல்ல
முப்பத்துமுக்கோடி தேவரும்வருக
சந்திரசூரியரும்வருக வேத
சாஸ்திரங்கள்சொல்லியே மறையோரும்வருக
செந்தில்வடிவேல்கோவில்சுற்றி வித்து
செவ்வேள்பதம்போற்றிப் பணிந்தானிடும்பன். (86)

அரகராவேலனைநமாவோம் சுவாமி
அறுமுகமாய்வந்த வடிவேலநமாவோம்
அரகராமுருகாநமாவோம் வாலை
யம்பிகைபராசக்தி மைந்தாநமாவோம்
அரகராகுகனேநமாவோம் புண்ய
அன்பருக்கன்பான பொருளேநமாவோம்
அரகராதேவாநமாவோம் சுவாமி
அகிலபுவனத்திலும் நிறைந்தாய்நமாவோம். (87)

நன்றுகநின்றவடிவேலா இந்த
நகரத்திற்கரசான வுமையீன்றபாலா
குணமதான்விட்டுமேவந்து எங்கள்
குற்றம்பொறுத்து ரட்சிக்கமுந்து
என்றுமேயெல்லவரும்போற்ற வேலர்
எழில்மயிலேரியே கிருபையதுகொடுக்க
மன்றுமிகவொன்றுகக்குடும்பம் வாழ
மதிபெற்றுபதம்பற்றி வாராணிடும்பன். (88)

ஆலயம்பதிமுன்னிருக்கும் பெரிய
அலங்காரமண்டபத்தி லன்புடனேவந்து
சிலமுடனெல்லவரும்நின்று இந்தச்
சங்கரனைச்சுற்றிக்கனி கொண்டோனைக்கண்டு
கோலமுடனேகிசம்பாடிச் சுவாமி
கோவிலைவிட்டுவெளி சிறப்பாகவருக
நீலமயிலேறியேகந்தன் வெகு
நிமிடத்தில்வந்தவர் பக்கத்திலிருக்க. (89)

## ஆனந்தக்களிப்பு.

மூலமென ஆகாசவாணம்
முழங்கவே ஆகாச வாணமுதிரைய
வாதுமெனநேர்வாணமதிர ட
வாணங்கள்நிலவரிசை பொட்டிமுழங்க
பாதுமெனச்சந்திரனைப்போல
பகல்வத்திதிவட்டி கொண்டலைமறைக்க
கூடல்மூடனேயின்னம்வேடிக்கை செய்து
கூடியேதொழுதபின் வாராணிடும்பன். (90)

ஆண்டவர்கடாட்சமதுவைத்து நல்ல
அருமைதனைக்கார்த்துமிக வருமைதனைநோக்கி
தாண்டமயிலோனடிமைவாழ்த்தி வள்ளி
தன் துணைவிதெய்வானை யம்மனையும்போற்றி
நீண்டநெடுவேல்தனைவாழ்த்தி ஆதி
சின்றுனவையாபுரித் துரையுமேவாழ்த்தி
வேண்டிவருங்காவடிசெலுத்தி யருள்
வேள்பழனிமலைவிட்டு அடிவாரம்வந்து. (91)

ஆண்டியர்க்கன்னமதுபகர்ந்து இன்னம்
அனேகமறையோர்களுக்கு வேண்டியதைச்செய்து
பாண்டவர்சகாயமருநேசனை மனதில்
பாங்காய்நினைந்துபல அறமதைச்செய்ய
தாண்டகமறியவேவேலர் ஆந்தக்
காட்சியெல்லாமறிந்து கொலுவிற்குமேக
மாண்டலானந்தக்களிப்பைப் பாடி
மீளவே தன்பதி சென்றானிடும்பன். (92)

ஆனைமுகக்கணபதியும்வாழி சத்தி
யம்பிகையுநாதர்களும் பிர்மாவும்வாழி
கானமயிலேறினவர்வாழி நல்ல
கண்ணன் மாலுக்கினிய லட்சுமியும்வாழி
கானமாய்வளர்கின்றபொன்னிக் கரசு
கொடுமுடியில்மகுடேசர் பரதமதுவாழி
மானமுள்ளதெய்வானைவாழி வள்ளி
முதலானதேவியுட னெல்லவரும்வாழி. (93)

மேத்தியக்கலைவாணிவாழி சுருதி
முப்பதுமுக்கோடி தேவர்களும்வாழி
முத்திமுடிமாலையனும்வாழி நல்ல
[illegible] வாழி

குலாலமுனிவாழி கின்னர்
பத்தெண்ணாயிரம் ரிஷிகளும்வாழி
திரன்கந்தருவர்வாழி இதை
படிப்போருங்கேள்ப்போரும் வாழியவர்வாழி. (94)

---

149474

## ாயிரம்.

---

பன்னிருசீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்.

தண்ணவர் சுழலிந்தத் திராவிடத் தரணியில்
தழைக்கின்ற மானிடவர்
தன்மையாய் வேலர்க்குக் கொடுமுடிப் பொன்னிநல்
தீர்த்தமு முத்திரித்து
பண்ணவர் கிதம்பாடப் பலவகை மேளமுடன்
பழனிமலை வந்துபின்
பண்பாகக் கிரிசுற்றி மலையேறிப் பணிந்துமே
பதினாறபி ஷேகமும்
சுண்ணவர சிவந்திமுத வாசனையு மணிந்தந்த
சுரேசனைத் துதிக்கவே
சுதரிசன மறியவாறு வந்துவாந் தந்தருள
சுகம்பெற்று மலைவிட்டு
மண்ணவர் யேகும்வரை பாடுதர்க்கு யேடுகளில்
மறைந்ததை யெடுத்துவெளி
மறுவுற்ற மாரிமுத்து புதிக்கிவிடப் பிழையிதில்
மன்னித்தல றிவோர்கடமை.

சுபம் சுபம் சுபமங்களம்.

ஸ்ரீ பழனியாண்டவர்மீது வழிநடை
நூதன ஆனந்தக்களிப்பு
முற்றுப்பெற்றது.

---

தண்டாயுதபாணி துணை

பிரசித்திபெற்றதும் அநுபவத்தில் கைகண்டதுமான

# ஆஞ்சன பற்பொடி.

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில்,—இதுவரையில் உலகத்தில் எவ்வளவோ பற்பொடியைக் கண்டும் கேட்டும் அநுபவத்தில் பார்த்தும் சிலது உபயோகமில்லாமலும் சிலது ரோகத்தை அதிகப்படுத்தியும் சிலது பல் யாவற்றையும் கரைபிடிக்கச்செய்வதையும் கண்டிருப்பீர்கள் என்பது திண்ணம். மேற்கண்டவைகளைப்போலல்லாமல் பல்லில் ரத்தம்வருதல், பல்லில் ஈறுகட்டுதல், பல்லில் சொத்தைவிழுதல், வாய்நாற்றம், நாக்குத்தடிப்பு, பல்விறுவிறுப்பு, இன்னும பல்லைச் சேர்ந்த எவ்வித ரோகத்தையும் தீர்ப்பதற்கு இந்த பல்பொடி பலராலும் புகழப்பட்டது. இதை தினந்தோறும் டைரக்ஷனிற் சொல்லியபடி உபயோகித்துக்கொண்டே வந்தால் யாதொரு கெடுதியும் நேரிடாது. பல்லும் கறுக்காது. உத்தரவாதம் கொடுக்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| 1-டெஜன் விலை ரூபா | 2 | 4 | 0 |
| 1-டப்பியின் விலை அணா | 0 | 4 | 0 |
| சாம்பில் பாக்கெட் 1-க்கு | 0 | 1 | 0 |

வி பி-சார்ஜ் வேறு.


எனது விலாசம்.

M. வெங்கடாசலபதி,

ஸ்ரீ கண்ணபிரான்விலாச புக்டிபோ,

பழனி.